# சப்ரகமுவ மாகாணக் கல்வி திணைக்களம்
# வாராந்த பாடசாலை

- பாடம் : சித்திரக்கலை
- தரம் : 08
- பாடவேளை : 03
- வாரம் : 04
- தயாரிப்பு : எம்பிலிடிய கல்வி வலயம்

- ✓ உலகில் மிகப் பழமையான நாகரிகங்களில் மட்பாண்டக் கைத்தொழில் இருந்துள்ளதற்கான
- ✓ சான்றுகள் தொல்பொருள் ஆய்வுகளின்போது கிடைத்துள்ளன.
- ✓ இலங்கையிலும் ''மெகலிதிக'' கால மாயானங்களை அண்மித்த பகுதிகளில் கி.மு
- ✓ 600 இற்கு முற்பட்ட காலத்திற்குரியதென நிர்மாணிக்கப்பட்ட மட்பாண்டங்கள் பல கிடைக்கப்பட்டுள்ளன.
- ✓ யாழ்ப்பாணம் கந்தரோடை அநுராதபுரம் பொலநறுவை கண்டி போன்ற பிரதேசங்களில்
- ✓ செய்யப்பட்ட அகழ்வாராய்ச்சிகளின் போது பாரம்பரிய மட்பாண்டங்கள்
- ✓ கிடைத்துள்ளன.
- ✓ மட்பாண்ட நிர்மாணிப்புக்காக இலங்கையின் எல்லாபிரதேசங்களிலும் கெயோலின் களி சிவப்புக்களி மஞ்சள் நிறக்களிமண்கள் பதப்படுத்தப்பட்டுள்ளன.
- ✓ இவற்றிடையே கெயோலின் களி தரம்மிக்கது.
- ✓ மட்பாண்டங்களை நிர்மானிக்கும் முன் களிமண்ணில் உள்ள கல் மணல் தூசி என்பன அகற்றப்பட்டு களிமண் பதப்படுத்தப்படும்.
- ✓ களிமண்ணை பாதங்களால் மிதித்து பதப்படுத்தப்படுவதே பாரம்பரிய
- ✓ முறையாகும்.தற்போது இயந்திரங்கள் பயன்படுத்தப்டுகின்றன.

## நிர்மாணிக்கப்டும் பாண்டங்களின் வகைகள்

## வீட்டுப்பாண்டங்கள்

- சட்டி
- பானை
- குடம்
- அரிக்கன் சட்டி
- பெரிய சட்டி
- மூடியுடன் கூடிய சாடி

## சமய தேவைகளுக்கும் விழாக்களுக்கும் உரிய பாண்டங்கள்

- கெண்டி
- விளக்கு
- சிலம்பு
- பாத்திரம்
- கறுப்புச்சட்டி
- சிட்டி

கட்டிட நிர்மாணிப்பு

- ஓடு
- தட்டை ஓடு
- பீலி
- குழாய்

**பாரம்பரிய மட்பாண்ட வகைகள்**

- சட்டி
- கோபுரக்கலகம்
- பூச்சாடி

### கைவனைச்சில்லு

- ✓ இலங்கையில் கி.மு 1500 ஆம் ஆண்டுகளில் இருந்து கைவனைச்சில்லுகளைப் பயன்படுத்தி மட்பாண்டங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதற்கான சான்றுகள் உள்ளன.
- ✓ மரபு ரீதியான மட்பாண்ட கைத்தொழிலின் பொருட்டு பரவலாக பயன்படுத்தப்பட்டு வருவதும்
- ✓ இம்முறையாகும்
- ✓ அதன் பொருட்டு 2’ அல்லது 2½ அடி விட்டத்தை கொண்ட மரம் அல்லது கருங்கல்லை பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட வட்ட வடிவுடைய தகடு (சில்லு)பயன்படுத்தப்படும்.
- ✓ தற்காலத்தில் இந்த முறை பயன்படுத்தப்பட்டு வருகின்றது நின்ற நிலையில் பாண்டத்தை
- ✓ தயாரிப்பதற்கு ஏற்றவாறு பாத்ததை பயன்படுத்தி சில்லில் காணப்படும் விசேட தன்மையாகும்.
- ✓ இம்முறையில் அமைந்த வனைச்சில்லுகள் நிலத்தில் இருந்து 3½ **அளவு** உயரத்தில் உலோகம அல்லது பலகை கொண்டு அமைக்கப்படுகின்றன.
- ✓ இம்முறை மூலம் பூச்சாடிகள் சிறிய விளக்குகள் கூசாக்கள் அமைக்கலாம்

### வினாக்கள்

01. மட்பாண்ட கைத்தொழிலின் வரலாற்று பின்னணியை குறிப்பிடுக.

02 .மட்பாண்ட கைத்தொழிலில் காணப்படும் பிரதேசங்கள் எவை?

03. மட்பாண்டங்களை உற்பத்தி செய்யும் முறைகள் எவை?

04. மட்பாண்டங்களுக்காக ஊடகத்தை தயாரிக்கும் முறை யாது?

05 .மண்ணை உபயோகித்து செய்யும் வீட்டு பாவனைப் பொருட்கள் சமய விழா பொருட்கள் கட்டட நிர்மாணிப்புக்கு உதவும் பொருட்கள் என்பவற்றை குறிப்பிடுக.

06 .மட்பாண்டங்களை அலங்கரிக்க உபயோகிக்கும் தொழிநுட்ப முறைகளும் அலங்கார முறைகளும் எவை?